# நினைவு நாள்
# அக்டோபர் 10

## தமிழ் பெர்னாட்சா மு.வரதராசனார்

தமிழ் அறிஞர், கல்வியாளர், இலக்கிய ஆராய்ச்சியாளர், படைப்பாளர் என பன்முகப் பரிமாணம் கொண்டவர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றியவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன் முறையாகத் தமிழில் 'சங்க இலக்கியத்தில் இயற்கை' எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்.



தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய பன்மொழிப் புலமை பெற்றவர்.

ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் நடைபெற்ற கல்வி மாநாட்டில் இந்திய அரசின் பிரதிநிதியாக பங்கேற்றவர்.

1972ல் அமெரிக்க ஊஸ்டர் கல்லூரி இவருக்கு டிலிட். பட்டம் வழங்கிப் பெருமைப் படுத்தியுள்ளது.

**நான்காம் தமிழ்ச் சங்கம், மதுரை**
**செந்தமிழ்க் கல்லூரி**